**செய்தி வெளியீடு எண்: 169** **நாள் : 23.03.2016**

**செய்தி வெளியீடு**

ஹஜ் 2016–க்காக சுமார் 13,525 (7 குழந்தைகள் உட்பட) விண்ணப்பங்கள் ஹஜ் பயணிகளிடமிருந்து தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவால் பெறப்பட்டுள்ளன. எனவே, ஹஜ் 2016–க்கான ஹஜ் பயணிகளை 29–3–2016 அன்று குலுக்கல் முறை (குறா) மூலம் தெரிவு செய்யுமாறு மும்பை, இந்திய ஹஜ் குழு, மாநில ஹஜ் குழுவை கேட்டுக் கொண்டுள்ளது.

2. மும்பை, இந்திய ஹஜ் குழு கேட்டுக் கொண்டபடி ஹஜ் 2016–க்கான ஹஜ் பயணிகளைத் தெரிவு செய்ய குலுக்கலை (குறா) நடத்த தமிழ் நாடு மாநில ஹஜ் குழு முடிவு செய்துள்ளது. இக்குலுக்கல் நிகழ்ச்சி 29–03–2016 (செவ்வாய்க்கிழமை) அன்று காலை 10.30 மணியளவில் சென்னை, இராயப்பேட்டை, புதுக்கல்லூரியிலுள்ள, ஆனைக்கார் அப்துல் சுக்கூர் அரங்கத்தில் நடைபெறும்.

3. ஹஜ் 2016–க்காக, தமிழ் நாடு மாநில ஹஜ் குழு மூலமாக விண்ணப்பித்துள்ள புனிதப் பயணிகள் இக்குலுக்கலில் (குறாவில்) கலந்து கொண்டு நிகழ்ச்சியினை அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடத்திட ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**